JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 170/2017 |
| | | Prosecution P.W -- 1 |
| NAME | : | Ponmari. |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act44of 1969) on the Wednesday of 17.03.2021.

**மு.வி.**

நான் தற்போது வேலப்பநாடாரூரில் குடியிருந்து வருகிறேன். நான் பீடிச்சுற்றும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 1ம் எதிரி கணவர் ஆவார். மற்ற எதிரிகள் என் கணவரின் உறவினர்கள் ஆவார். நான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். வழக்கை மேல் நடத்த விருப்பம் இல்லை. எதிரிகள் என்னை கெட்ட வார்த்தைகளால் பேசி,அடித்து காயப்படுத்தவில்லை, எனக்கு கொலை மிரட்டல் விடுக்கவில்லை.என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.அந்த புகார் மனுவை நான் போலிசார் சொல்ல சொல்ல எழுதினேன். புகார் மனுவின்படி எந்த் சம்பவமும் நடைபெறவில்லை. புகார் மனுவின் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.அ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது, இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது எனக்கும் முத்துக்குமார் என்பவருக்கும் ஏற்கனவே திருமணமாகி கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து விட்டோம் என்றும், அதற்கு பின்னர் நானும் 1ம் எதிரியும் காதலித்து திருமணம் செய்து வந்தோம் என்றும்,

பின்னர் சென்னையில் 1ம் எதிரியும் நானும் தனியாக சேர்ந்து வாழ்ந்து வந்தோம் என்றும், சென்னையில் வாழும் போது 1ம் எதிரி தன்னுடைய லைசென்ஸ் புதுப்பிதற்காக ஊருக்கு சென்றவர் திருப்பி வரவில்லை என்றும், நான் அலைபேசியில் பேசும் போது திரும்ப வரமாட்டார் என்று சொன்னார் என்றும், 21.08.2014ம் தேதி நான் சென்னையிலிருந்து எனது சொந்த ஊருக்கு வந்து என் பெற்றோர் வீட்டுக்கு சென்றதாகவும், 25.08.2014ம் தேதி காலை எட்டு மணிக்கு நானும் என் அப்பாவும் எதிரிகள் வீட்டிற்கு சென்று எதிரிகள் அனைவரிடமும் சேர்ந்து வாழ்வது பற்றி கேட்டோம் என்றும், அப்போது எதிரிகள் அனைவரும் கெட்ட வார்த்தைகளால் பேசியும், கையால்அடித்து கீழே தள்ளியும், பெண் என்றும் பாராமல் அவமானப்படுத்தியதாகவும், பின் கொலை மிரட்டல் விடுத்தாகவும், எதிரிஅடித்ததால் எனக்கு வலி மற்றும் அவமானம் ஏற்பட்டது என்றும், 27.08.2014 ம் தேதி மாலை 04.30 மணிக்கு நானும் என் அப்பாவும், ஆலங்குளம் அனைத்து மகளிர் காவல் நிலையம்சென்று எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன் என்றும், பின்னர் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், உதவி ஆய்வாளர் விசாரணையின் போது சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி :

என்னுடைய முதல் கணவர் முத்துக்குமார் தென்காசி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் H.MoP 3/2014 ஆக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால்சரிதான். மேற்படி வழக்கின் இரண்டாம் எதிர் மனுதாரர்யாக ஆரோக்கியசாமி என்ற சுதாகரரை இவ்வழக்கில் சேர்ந்துள்ளார் என்றால் அது பொய். மேற்படி விவாகரத்து வழக்கின் நான் ஆஜராகி பதில் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கின் என்னை விசாரணை செய்த உதவி ஆய்வாளரிடம் நீதிமன்ற விவாகரத்து உத்தரவு எதுவும் நான்தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி விவாகரத்து வழக்கு எந்த ஆண்டு முடிவுற்றது என்று எனக்கு தெரியாது. நான் நீதிமன்ற முதல் விசாரணையின் 1வது எதிரியை என் கணவர் என்று சொல்வது உண்மையல்ல. இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.